## பொன் வித்யாஷ்ரம் பள்ளி - வளசரவாக்கம்.
## முதல் பருவத் தேர்வு (pt -1) 2017-18.
## பயிற்சி வினாத்தாள்- 1.
## தமிழ் இரண்டாம் மொழி

**வகுப்பு -VI**

### I. செய்யுள் வினாக்கள்:

1. திருவருட்பா பாடலை எழுதி அதன் பொருளையும் எழுது.
2. இராமலிபங்க அடிகளார் ஆசிரியர் குறிப்பு தருக.
3. என்பும் உரியர் பிறர்க்கு என்ற குறளின் கருத்தை பாடலுடன் விளக்குக.
4. உலகத்தில் மகிழ்ச்சியுடையவர் யார்? இக்கருத்தினை பாடலுடன் விளக்குக.
5. வற்றல் மரம் தளிர்த்தற்று என்ற குறளின் கருத்தை பாடலுடன் விளக்குக.
6. என்பிலதனை, அன்பிலதனை என்ற இவ்வரிகள் உணர்த்தும் கருத்தினை பாடலுடன் விளக்குக.
7. என்புத் தோல் போர்த்த உடம்பு இவ்வரிகள் உணர்த்தும் கருத்தினை பாடலுடன் விளக்குக.
8. திருக்குறள் - நூற் குறிப்பு தருக.
9. திருவள்ளுவர் - ஆசிரியர் குறிப்பு தருக.
10. நல்ல நட்பை நாம் எவ்வாறு பெறுதல் வேண்டும் என்பதை நாலாடியார் மூலம் பாடலுடன் விளக்குக.
11. நாலடியார் - நூற் குறிப்பு தருக.
12. கல்வியைப் பற்றி நான்மணிக்கடிகை கூறும். கருத்துகளை பாடலுடன் விளக்குக.
13. விளம்பி நாகனார் - ஆசிரியர் குறிப்பு தருக.
14. நான்மணிக்கடிகை - நூல் குறிப்பு தருக.
15. வாழ்த்து, திருக்குறள், நாலடியார், நான்மணிக் கடிகை இவற்றின் சொற்பொருளை எழுதுக.

## II. உரைநடைப் பகுதி:

1. உ.வே.சா. வின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிய வெளி நாட்டவர் யார்?
2. உ.வே.சா. அவர்களின் இளமைப் பருவம் குறித்து எழுதுக.
3. உ.வே.சா வின் தமிழ்த் தொண்டினை நடுவண் அரசு எவ்வாறு பெருமைப் படுத்தியுள்ளது?
4. உ.வே.சா. அவர்களை தமிழ்த்தாத்தா என்று வழங்கக் காரணம் என்ன?
5. உ.வே.சா. அவர்களின் பெயரால் எங்கு நூல் நிலையம் அமைந்துள்ளது?
6. வலசை போதல் என்றால் என்ன?
7. பறவைகள் சரணாலயம் என்றால் என்ன?
8. மனிதர்களின் நண்பன் பறவைகள் எவ்வாறு? விளக்குக.
9. பறவைகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?அவை யாவை?
10. கூந்தன் குளம் பறவைகள் சரணாலயம் பற்றி விளக்குக.
11. தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் ஐந்தின் பெயரை மட்டும் எழுதுக.
12. சமவெளிப் பறவைகள்,  நீர்வாழ் பறவைகள், மலைகளில் வாழும் பறவைகள் இவற்றின் பெயர்களை வகைக்கு ஐந்தினை எழுதுக,

## III. துணைப்பாட வினாக்கள்:

1. 'வீரச் சிறுவன்' என்பது யாரைக் குறிக்கிறது? அவனது இயற்பெயர் என்ன?
2. பெண்மணியின் கூக்குரலைக் கேட்ட சிறுவனின் எண்ணம் யாது? பொதுமக்களின் செயல் யாது?
3. குதிரை வ்ண்டியில் பயணம் செய்தோர் யாவர்? குதிரை வண்டியில் இருந்தோரை நரேந்திரதத் எவ்வாறு காப்பாற்றினான்?
4. குதிரையை அடக்கிய பின் நரேந்திரதத்தின் நிலை என்ன?
5. கொல்கத்தா நகர வீதியில் சிறுவன் கண்ட காட்சி என்ன?
6. ஓரிகாமி என்றால் என்ன? ஜப்பானியர் வணங்கும் பறவை எது?
7. சடகோ எந்த நாட்டுச் சிறுமி? அவளது முழுப் பெயர் என்ன? சடகோவின் தோழி யார்?

8. சடகோவிற்கு வந்த நோய் யாது? அந்நோய் ஏற்பட காரணம் என்ன? சடகோவின் நோய் தீர அவளது தோழி கூறிய அறிவுரை யாது?
9. ஜப்பானில் அமெரிக்கா குண்டு வீசிய இடங்கள் எத்தனை? அவை யாவை? சடகோ மொத்தம் எத்தனை கொக்குக்ள் செய்தாள்?
10. சடகோவின் நினைவாக அவளது தோழிகள் செய்த செயல் யாது?

## IV. இலக்கணப் பகுதி:

1. இலக்கணம் கற்பதன் நோக்கம் மற்றும் பயன்கள் யாவை?
2. நட்பு எழுத்துகளை விளக்குக.
3. முத்லெழுத்துகளை விளக்குக.
4. குறில் என்றால் என்ன விளக்குக.
5. நெடில் என்றால் என்ன? விளக்குக.
6. ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு இவற்றை விளக்குக.
7. ஆனம், நாழி, அகவிலை, திறவுகோல் இவை யாவை? சொலவடை என்பது யாது?
8. ஒற்று என்றால் என்ன? ஒற்றுப் பிழை என்பது யாது?
9. எவற்றை மயங்கொலிப் பிழைகள் என்பர்?
10. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
11. பெயர்ச் சொல், வினைச் சொ என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
12. ஒரு சொல் பல பொருள் என்பது யாது? உதாரணம் தருக.
13. இரட்டைக்கிளவி என்றால் என்ன? உதாரணம் தருக.
14. ஆறு என்பது எவ்வகைப் பொருள்களைக் குறிக்கும்?
15. உரிய பொருளைக் கண்டு பிடித்து எழுது.

பச்சைக் குழந்தை -

பச்சைப் பொய் -

பச்சைத் தண்ணீர் -

16. கீழ்க்கண்ட சொற்கள் உணர்த்தும் பொருள் யாது?

மரமும் தழையும் -

தழையா வெப்பம் தழைக்கவும் -

நாடு தழைக்க வேண்டும் -

சேலையைத் தழையத் தழைய உடுத்தினாள் -

V. **கடிதப் பகுதி:**

விடுப்புக் கடிதம்

உனது வகுப்பாசிரியருக்கு இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டிக் கடிதம் ஒன்றை எழுது.

*************************************